★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
# the EELANADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆவணி 15 ஷவ்வா 7 இதழ் 200
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 31-8-79

இறக்குமதி செய்யப்பட்ட
R M I (Ladies Bicycles)
பெண்களுக்கான சைக்கிள்கள்
வந்துவிட்டன
தொடர்பு கொள்ளவும்;
நாபன்ஸ் ரேட்ஸ்
சேகரன் கட்டிடம்
74, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 693

இறக்குமதி செய்யப்பட்ட
☆ பலவித பரிசுப் பொருட்கள்.
அழகு சாதனப் பொருட்கள், தையல் வேலைகளுக்குரிய சகல பொருட்கள்.
மற்றும்
☆ யப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல தரங்களிலுமுள்ள காதுகேட்கும் கருவிகள் யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
கிருபா கிவ்ற் கவுஸ்
KIRUBA GIFT HOUSE
சோதிடவிலாஸ் கட்டிடம்
46, பெரியகடை- யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8083

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS ★ LIBRARY ★ RECEIVED 1979-8-31 PERIODICALS DIVISION

### அணிசேரா மகாநாடு பிசுபிசுக்குமா?

# கியூபாவின் போக்கில் பல நாடுகள் அதிருப்தி

## காஸ்ட்ரோவுடன் பேச டிட்டோ ஹவானுவுக்கு விரைந்தார்

ஹவானு ஆக.30

அடுத்தவாரம் ஆரம்பமாகவிருக்கும் அணிசேரா நாடுகளின் மகாநாட்டில் கியூபா மேற்கொள்ளவிருக்கும் நிலைகுறித்து இப்பொழுதே பெரும் பிரச்னைகள் தலைதூக்கியுள்ளது.

மகாநாட்டில் தாக்கல் செய்வதற்காக கியூபா தயாரித்துள்ள நகல்பிரகடனம் பல நாடுகளின் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டுள்ளன.

இந்த பிரேரணை அணிசேரா இயக்கத்தை சோவியத் யூனியனுடன் நெருக்கம் கொள்ளச் செய்வதாக உள்ளது என்று பல நாடுகள் கண்டித்துள்ளன.

அணிசேரா இயக்கம் தொடர்பான கியூபாவின் அணுகுமுறை கூற்றுநிலைமை மாற்றிக் கொள்ளச் செய்யும் முயற்சியில் யூகோஸ்லாவிய ஜனாதிபதியும் அணிசேரா இயக்கத்தின் ஸ்தாபகர்களில் உயிருடன் இருக்கும் தலைவருமான மார்ஷல் டிட்டோ இறங்கியுள்ளார்.

மகாநாடு ஆரம்பமாவதற்கு 5 நாட்களுக்கு முன்னதாகவே கியூபா தலைநகரி வந்துசேர்ந்துள்ள அவர் கியூபா அதிபர் டாக்டர் காஸ்ட்ரோவுடன் ஆலோசனைகள் நடத்த விருக்கிறார்.

கியூபா தயாரித்துள்ள நகல் பிரகடனம் அமெரிக்காவைக் கடுமையாகக் கண்டிப்பதாகவுள்ளது. இந்துசமுத்திரத்தில் அமெரிக்கா தன் கடற்படையை நிறுத்த முற்படுவதாகக் கண்டித்துள்ள கியூபா அரபுக் கடற்பகுதியில் அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் நிலைகொண்டிருப்பதையும் அது கண்டித்துள்ளது.

கியூபாவின் இந்த நகல்பிரகடனத்தை எகிப்து கடுமையாக எதிர்த்துள்ளது. அணிசேரா இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை அலட்சியம் செய்வதாகவும், பாரபட்சமானதாகவும் உள்ளது என்று எகிப்து குற்றஞ்சாட்டியுள்ளது. அணிசேராக் கொள்கைக்கும் புதிய அர்த்தம் கற்பிக்க முற்பட்டுள்ளதாகவும் எகிப்து கியூபாவைக் கண்டித்துள்ளது.

இந்தசமயம் கியூபா தனது நகல் பிரகடனத்தைத் திருத்தி விட்டதாகவும், அதன் பிரதிகள் அணிசேரா நாடுகளின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டு [illegible] செய்தி கூறுகின்றது.

கியூபா செல்லும் வழியில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜயவர்த்தன நேற்று ஸ்பெயின் போய்ச் சேர்ந்தார்.

### நூற்றாண்டு விழா மண்டபம்

(யாழ்ப்பாணம்)

நாவலர் நினைவு மண்டபத்திற்கு ஆறுமுகநாவலர் நூற்றாண்டுவிழா மண்டபமெனப் பெயர் சூட்டுமாறு அரசைக் கோரும் தீர்மானம் யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேறியது.

யாழ் நகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் கொண்டு வந்த அத்தீர்மானம் வருமாறு:

"சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டாற்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் அண்மையில் நிகழவிருப்பதால், நீண்டகாலமாக அமைக்கப்படாது இழுபட்டுவரும் நாவலர் நினைவு மண்டபவேலைகளை விரைந்து பூர்த்தி செய்யுமாறும், மேற்படி விழாவை புதிய மண்டபத்திலேயே அமர்க்களமாக நடத்துமாறும், மண்டபத்துக்கு ஆறுமுகநாவலர் நூற்றாண்டு விழா மண்டபமெனப் பெயர் சூட்டுமாறும் இச்சபை [illegible] அரசை கேட்டுக்கொள்கிறது."

மாநகரசபை முதல்வர் கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானமும் நிறைவேறியது.

[8-ம் பக்கம் பார்க்க]

### ஜனதா - அ. தி. மு. க. கூட்டுக்கு வாய்ப்பில்லை

சென்னை, ஆக. 30

ஜனதாகட்சி அண்ணா திமுகாவுடன் கூட்டு சேர்வதென்ற வாய்ப்புக்கே இடமில்லையென்று முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பி. ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

தி. மு. க. வுக்கும், ஜனதாவுக்குமிடையிலுள்ள தேர்தல் உடன்பாட்டை டிசம்பரில் நடைபெறவிருக்கும் லோகசபைத் தேர்தலையொட்டிப் புதுப்பித்துக்கொள்வது பற்றி தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியுடன் ஆலோசனைக்கு வந்ததாகவும் அவர் கூறினார்.

### கலவரத்தில் 12 பேர் பலி

புதுடில்லி, ஆக. 20

ஜாம்ஷெத்பூரில் ஏற்பட்ட இனக் கலவரங்களில் இதுவரை 12 பேர் பலியாகியுள்ளனர். அங்கு இன்றிரவும் ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்பட்டது.

### சத்திர சிகிச்சைக்கு பயந்து தற்கொலை

(யாழ்ப்பாணம்)

சத்திர சிகிச்சைக்குப் பயந்து 60 வயது வயோதியர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

சுதுமலையைச் சேர்ந்த நாகன் கந்தையாவின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

யாழ் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ் எஸ் பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

3 வருடத்திற்கு முன் கேணியா சத்திரசிகிச்சை செய்தவருக்கு மீண்டும் கேணியா வந்ததாகவும், மறுநாள் சத்திர சிகிச்சைக்கு வருமாறு ஆஸ்பத்திரியிலிருந்து அறிவித்தல் வந்ததாகவும், இதனால் அவர் கவலைப்பட்டுக் கொண்டிருந்தாரென்றும், இரவு நச்சுத்திராவகம் அருந்தினாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

அடுத்த அறையில் படுத்திருந்த மனைவியிடமும் மகனிடமும் தான் மருந்து குடித்து விட்டதாக அவர் கூறியதைத் தொடர்ந்து உடனடியாக யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [ஏ]

### யாழ்ப்பாண மாவட்டத்தின்

# அபிவிருத்தி திட்டமிடல் கருத்தரங்குஇன்றுஆரம்பம்

## அரசாங்க அதிபர் அங்குரார்ப்பணம் செய்துவைக்கிறார்

[யாழ்ப்பாணம்]

"யாழ்ப்பாண மாவட்டத்தின் அபிவிருத்தியைத் திட்டமிடல்" என்ற தலைப்பின் கீழ் இரண்டு நாள் ஆய்வுக் கருத்தரங்கை, யாழ்ப்பாண மாவட்ட அமைச்சின் வேண்டுகோளின் பேரிலேயே இலங்கை நிர்வாகக் கல்விக் கழகம் இன்றும் நாளையும் யாழ்ப்பாணச் செயலக மண்டபத்தில் நடத்தவுள்ளது.

குருநாகல், மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இத்தகைய ஆய்வுக் கருத்தரங்கை நடத்தி எடுத்துக்கொண்ட அபிவிருத்தி, திட்டமிடல் முடிவுகளின் பின்னரே மேற்படி மாவட்டங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்கு உலக வங்கி நிதியுதவி செய்திருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு 30 கோடி ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது. இத்தகவலைப் பிராந்திய அபிவிருத்தி, இந்து கலாச்சார தமிழ்மொழி உபயோக அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை அண்மையில் சென்னையில் வைத்து வெளியிட்டார். இந்த ஒதுக்கீடு நிகழ்வதற்கான முன்னோடியாக அபிவிருத்தியைத் திட்டமிடுவது பற்றிய ஆய்வரங்கொன்று நடைபெறவேண்டியது அவசியமாகும். அத்தோடு முதல்முறையாக யாழ் மாவட்டத்தின் பொருளாதார வளம், நில அபிவிருத்தி, நீர்த் தேவைகள், கைத்தொழில், மீன்பிடித்துறை முதலான சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஆய்வரங்கொன்றும் திட்டமிடலுமே திட்டமிடலுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி கருத்தரங்கை அங்குரார்ப்பணம் செய்து வைத்துத் தொடக்கவுரை நிகழ்த்துவார். இலங்கை நிர்வாக கல்விக்கழக இயக்குநர் திரு வி ரி நவரத்தின, ஐ. நா. சபையின் நிரந்தரப் பிரதிநிதியான திரு. இக்கருத்தரங்கில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொள்வர். ஆய்வரங்கில் பிரதிப் பணிப்பாளர் நிர்வாகப் பயிற்சிக் கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ். இவானந்தன், திரு கே. பொன்னம்பலம், திரு. எஸ். இவதாசன், திரு. கே. சண்முகதாஸ் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், பிரதேச வங்கி முகாமையாளர்கள், பல்கலைக்கழகப் பொருளியல்துறை விரிவுரையாளர்கள் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள். [ஏ]

### முதலாம்பிரிவு

### முதலாம் வருட பரீட்சை முடிவுகள்

(அரியாலை)

பேராதனை பல்கலைக்கழக வைத்தியபீடத்தின் பல் வைத்திய பிரிவின் முதலாம் வருடப் பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளிவந்தது.

ஐம்பது மாணவமாணவிகள் பயிலும் இப்பிரிவில், 2ம் பிரிவில் சித்திபெற்ற இரு மாணவர்களுட்பட மொத்தம் 14 பேர் பூரணசித்தி பெற்றுள்ளனர். 5 மாணவர்கள் 4பாடங்களிலும் சித்திபெறத் தவறியுள்ளனர் ஏனையோர் மற்றப் பாடங்கள் சிலவற்றில் நானசித்தி பெற்றுள்ளனர்.

## விளம்பரம்


### தேவை

சிறிய BAI குடும்பத்துக்கு யாழ் மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு தேவை. அறிய தரவும் சிறேக்ஸ் 24B, பெரிய கடை, யாழ்ப்பாணம். 3445

### தேவை

ஆங்கில தட்டச்சு அனுபவமுள்ள இளைப்பாறிய முதலாம் தர தபாலதிபர், யாழ் மாநகர சபை எல்லைக்குள் பொறுப்பு வாய்ந்த ஸ்தாபனத்தில் தகுதிக்கேற்பகடமையாற்றவிரும்புகிறார் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 3449, கே/பா "ஈழநாடு", யாழ்ப்பாணம். 3449

### விற்பனைக்கு

ஒரு பரப்புக் காணி இரண்டு அறை வீடு, கிணற்றுடன் விற்பனைக்குண்டு விலை ரூபா 45,000 விபரங்கட்கு: வேலப்பையா, சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் ஒழுங்கை, நல்லூர். 3436

நன்கு பாவிக்கப்படாத புதிய வில்லியேர்ஸ் பீரடம் நீரிறைக்கும் யந்திரம் வண்டி, குழாய்களுடன் விற்பனைக்குண்டு. 213, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். 3437

சமீபத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட, மிக நல்லநிலையிலுள்ள மொறிஸ் மைனர், Lancia Fulvia கார்கள் விற்பனைக்குண்டு தொடர்புகொள்ளும் விலாசம்: "இரத்தினவாசா" 71/10, கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். 3446

### பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீன முறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங் றேடியோ (Transistor) Building Technology P M G Certificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57, பரமேசோல் வீதி, யாழ்ப்பாணம். 3369


## ஏலவிற்பனை

### யாழ். மாநகர சபை

யாழ்ப்பாணம் நல்லூர் கல்யாண மண்டப வளவில் வைத்து 20,800 தென்னம் கிடுகுகளும், 5000 முளைப் பனைச் சிலாகைகளும் எதிர்வரும் 3-9-79 ஆம் திகதி திங்கள் கிழமை மு. ப. 10-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப் படும் சித்திபெற்ற ஏலதாரர் உடனடியாகப் பணத்தைச் செலுத்தி பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும். இது சம்பந்தமான எனது 16-8-79 ஆம் திகதிய ஏலவிற்பனை அறிவித்தல் இத்தால் ரத்துச் செய்யப்படுகிறது.

க. சிவஞானம்,
மாநகராட்சிமன்ற ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
30-8-79 3452

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

'ஈழநாடு' கிண்ணத்திற்கான

# மென்பந்துகிரிக்கட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

'நொதேர்ண் ஸ்போட்ஸ்' சஞ்சிகையின் ஆதரவில் 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணத்திற்காக நடைபெற்றுவரும் மென்பந்து தொக்கவுட்' கிரிக்கட் சுற்றுப்போட்டியின் 16 வயதுக்கு மேற்பட்டோருக்கான போட்டிகள் நாளை சனிக்கிழமை செமிநந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றன. இப்போட்டிகளில் பதினைந்து கழகங்கள் மோதுகின்றன.

16 வயதுக்கு உட்பட்டோரின் சுற்றுப்போட்டி ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன. இதில் எட்டுக் கழகங்கள் மோதுகின்றன.

இறுதிப்போட்டிகள் அடுத்த மாதம் 15ம் திகதி அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும். (இ)

## இராமநாதன் ம.வி விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் இராமநாதன் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

சாவச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி இராஜநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார் விஞ்ஞானக் கல்வி அதிகாரி திரு இ. கமலநாதன் பரிசில்களை வழங்குவார். (கு)

கதிர்வேலாயுதசுவாமி

## மண்டலாபிஷேக இறுதிநாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

வண்ணை நகர் அருள்மிகு செந்தில் கதிர்வேலாயுதசுவாமி (ஸ்ரீ கதிரேசன் கோயில்) மண்டலாபிஷேக நிறைவு தினம் இன்று வெள்ளிக்கிழமையாகும். காலை 8-30 மணி தொடக்கம் விசேஷ பூஜை ஆராதனைகள் இடம்பெறும்.

பகல் 12 மணிக்கு சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி "கந்தன் கருணை" என்னும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார் பகல் 1 மணிக்கு மாகேஸ்வரபூஜை (அன்னதானம்) நடைபெறும்.

மாலை 5-30மணிக்குசாயரட்சைப் பூஜையும், 6-30மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும், 7 மணிக்கு வள்ளி தேவசேனா சமேதராய் அருள்மிகு கதிர்வேலாயுதசுவாமி வெளிவீதி வருதலும் இடம்பெறும்.

இரவு 9 மணிக்கு "சிவனை மணந்த சிவம்" என்னும் பொருள் பற்றி உடப்பூர் பெரிய சோமாஸ்கந்தர் குழுவினரால் வில்லிசைக் கச்சேரியும் நடாத்தப்படும். (கொ)

## திருமணவிழாவில் பனைஓலைத் தோரணம்

மங்களகரமான கொண்டாட்டங்களாயினும்சரி அல்லது வேறெந்த வைபவங்களாயினும் சரி தோரணங்கள் தென்னங்குருத்து ஓலையிலேயே செய்து 'தொங்கவிடப்படுவது தமிழர் மரபு.

தோரணம் என்றதும் தென்னங்குருத்தும் மாவிலையுமே ஞாபகத்திற்கு வரும்.

பருத்தித்துறை — துன்னாலையில் நடைபெற்ற ஒரு திருமண விழாவுக்குச் சென்றிருந்தேன். அங்கு பனைஓலைக் குருத்தினால் செய்யப்பட்ட தோரணங்கள் மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் செய்து தொங்கவிடப்பட்டிருந்தன.

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு இ குமரகுருவின் புதல்வி டாக்டர் யசோதராவின் திருமணத்திலேயே பனைஓலைத் தோரணங்களால் அலங்கரித்திருந்தனர் மணமகன் உடுப்பிட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற வட்டாரக் கல்வியதிகாரி திரு நடராஜாவின் புதல்வன் டாக்டர் சதானந்தன் நீதவானின் திருமண வீட்டில் புதுமையான முறையில் பனையின் மகிமை துலங்குவதைக் கண்டு பலரும் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டனர்.

— நன்னோன்

## ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டியும்

(புலோலி)

பருத்தித்துறை நெப்போலியன் விளையாட்டுக் கழகத்தின் 13வது ஆண்டுவிழாவும் விளையாட்டுப் போட்டியும் அடுத்த மாதம் 14ந் திகதி ஆரம்பித்து 16ந் திகதிவரை நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டுப் போட்டியில் மல்யுத்தப்போட்டி, தலையணைச் சண்டை, கபாடி, குத்துச்சண்டை, நடனப் போட்டிகள் உட்பட இன்னும் பல நிகழ்ச்சிகள் இடம்பெறும். ( )

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி வடக்கு கொழுவியங்கலட்டி பிள்ளையார் கோவில் சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா நாளை சனிக்கிழமை காலை நடைபெறும். வைபவத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு அ அமிர்தலிங்கம் தலைமைதாங்குவார்.

புதியபாணியில் அமைக்கப்பட்ட சித்திரத்தேரை மாசியப்பிட்டி வடக்கு சிற்பாசிரியர் சரவணமுத்துவின் சிரேஷ்ட புதல்வன் திரு. ச. ஜெயரசாவும், மயிலிட்டி சரவணை கவின் கலையகக் கலைஞர்களும் உருவாக்கியுள்ளனர்.

தேர் உற்சவம், அடுத்த மாதம் 3ந் திகதி நடைபெறும். (செ)

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 15ம் திகதி
வெள்ளிக்கிழமை
(31-8-1979)

**மேடம்:** இதயம் எரிமலையாகும், எதிரிகள் தாக்குவர், ஏமாற்றத்திற்கு இடமுண்டு எனினும் இருள்சூழ்ந்த நிலையிலும் ஒளிக்கோடுகள் தோன்றக்கூடும், அதிக பேச்சைத் தவிர்த்து காரியத்தில் கண் வைக்கவும்.

**இடபம்:** வாழ்வுப் பயணத்தில் இன்று வளமான திருப்பம் ஏற்படும். இலட்சியவாதிகள் பூரிப்படைவார்கள். குடும்பத்தில் குதூகலமான சம்பவம் இடம்பெறும், பொதுவாக மனநிறைவுக்கு இடமுண்டு.

**மிதுனம்:** கொடுக்கல் வாங்கல் மூலம் அபிப்பிராய மோதல்கள் ஏற்படும், கடன் தொல்லை அதிகரிக்கும், நண்பர் ஒருவர் உண்மைத் தவறான பாதையில் இழுத்துச் செல்வார், மௌனம் நன்மை தரும்.

**கடகம்:** தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும், தெய்வ நம்பிக்கை மேலிடும், ஸ்தலயாத்திரையொன்று மேற்கொள்ளப்படலாம், நினைத்தச் சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

**சிங்கம்:** இடமாற்றத்துக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம், சிலருக்கு வெளியூர்ப் பயணத்துக்கு இடமேற்படும், தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், உற்சாகமான தினம்.

**கன்னி:** செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும், செய்தொழிலிலும் விருத்தியுண்டு, உடன்பிறந்த ஒருவருக்கு மகிழ்ச்சிகரமான சம்பவமும் இடம்பெறலாம்.

**துலாம்:** இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும், காதலர்களை தாக்கும், கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள் பாலுணர்ச்சி மேலிடும், வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும்.

**விருட்சம்:** கொள்கையில் கோணலால் நல்ல சந்தர்ப்பத்தைக் கோட்டைவிடுவீர்கள், ஆணவப்பேச்சு ஆபத்தைத் தேடித் தரலாம், பிள்ளை பொன்றின் பிணி கவலையைக் கொடுக்கும், அமைதியுடன் செயலாற்றவும்.

**தனு:** கைநிறையப் பணம், காதல் செய்பத்திலே வாழ்க்கையே கலகலப்பாக இருக்கும், இனிக்கப் பேசுவதன்மூலம் வேண்டியவர்களை சொந்தமாக்கிக்கொள்வீர்கள், அலங்காரப் பொருட்களில் ஆர்வம் பிறக்கும், சுவையான தினம்.

**மகரம்:** நினைவின் நிழலாட்டம் நிம்மதியைச் சிதறடிக்கும், உறவினர்கள் மத்தியில் பூசல்கள் தலைதூக்கும், அன்னியர்களின் தொடர்புகள் சிக்கலைத் தோற்றுவிக்கும், மட்டமான நிலை.

**கும்பம்:** கருத்து வேற்றுமைகள் மறைவதற்கு இடமுண்டு தங்கள் திறமைக்கு முன்பு மற்றவர்கள் சிரம் தாழ்த்துவார்கள் நீண்டகாலம் பயனளிக்கக் கூடிய பொருளொன்று கிடைக்கக்கூடும்.

**மீனம்:** மேம்பட வாழ்வீர் பிதாவழித் தனமும் கிடைக்கும், நீண்டநாள் ஆசை இன்று பலித்திடும் பார், தரமான நாள்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## இசைவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையினர் நடத்தும் இசைவிழா, செப்டெம்பர் மாதம் 14-ம் 15-ம் 16-ம் திகதிகளில் கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்திலும், செப்டெம்பர் மாதம் 18-ம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

இசைவிழாவில், தென்னிந்திய பிரபல பாடகி திருமதி மணி கிருஷ்ணசாமியும், இலங்கையின் சிறந்த இசைக்கலைஞர்களான என். கே. பத்மநாதன் உருத்திரகானமூர்த்தி — பஞ்சமூர்த்தி சகோதரர்கள், என் சண்முகரத்தினம். எஸ். பரமநிங்கராஜா, ராம குமாரசாமி. என் திலகநாயகம் போல், சத்தியபாமா இராஜலிங்கம், ஜெகதாம்பிகை பரமநாதன், எஸ். சண்முகராகவன், ஏ. கே கருணாகரன் ஆகியோரும் மற்றும் பல கலைஞர்களும் கலந்துகொள்கிறார்கள் இசைக்கச்சேரிகளுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிலைய வாத்தியகோஷ்டியினரின் கூட்டிசை நிகழ்ச்சியும், பிரபலபாடகர்களைக்கொண்ட மெல்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளன.

தென்னிந்திய பிரபல பாடகி திருமதி மணி கிருஷ்ணசாமி, சங்கீத கலாநிதிகளான டைகர் வரதாச்சாரி, பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், மைசூர் வாசுதேவாச்சாரியர், ரி கே ஜெயராம ஐயர், முசிரி சுப்பிரமணியஐயர் ஆகியோரிடம் முறையாகச் சங்கீதம் கற்றுக்கொண்டவர் திருமதி மணி கிருஷ்ணசாமி இந்தியாவில் தலைசிறந்த பாடகர்களில் ஒருவராக இருப்பதுடன் திருமதி எம எஸ். சுப்புலக்ஷ்மிக்கு அடுத்ததாகக் கணிக்கப்படுகிறார்.


# ஏ. பவர் அன்ட் கொம்பனி லிமிடட்

ஏ.பவர் அன்ட் கொம்பனி லிமிடட் நிறுவனத்தார் செப்டம்பர் மாதம் 1-ம் திகதி தமது யாழ்ப்பாணக் கிளையை, மணிக்கூட்டுக்கோபுரவீதி, 5-ம் இலக்கத்தில் திறக்கும் செய்தியைமகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார்கள். இந்தஸ்தாபனம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பதிவுசெய்யப்பட்ட மொத்த விற்பனையாளருக்கு ஒரு மொத்தவிற்பனை ஸ்தாபனமாகவிளங்கும். அத்துடன் ஒரு சில்லறை விற்பனை ஸ்தாபனமாகவும் செயலாற்றும். மருந்துவகைள், உரம்,விவசாயரசாயனப் பொருட்கள், தெளிகருவிகள், ஓவல்டின், துணிச்சாயங்கள், மின்விசிறிகள், ஜேக்கப் விஸ்கோத்துக்கள் முதலான எம்மிடமுள்ள எல்லாப்பொருட்களையும் இந்த ஸ்தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். 3417

# அகில இலங்கை ரீதியாக சுவாமி விவேகானந்தர் விழா

## சிறப்பாகக் கொண்டாட இந்து மகாசபை இலங்கைக் கிளை ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

சுவாமி விவேகானந்தர் தினவிழா அடுத்த வருடம் ஜனவரி மாதம் 12-ம் திகதி அகில இலங்கை ரீதியாக உலக இந்து மகா சபையின் இலங்கைக் கிளையினால் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

இத் தகவலை யாழ். மாவட்ட அமைச்சின் செயலரும், யாழ் அரசாங்க அதிபரும், உலக இந்து மகாசபையின் இலங்கைக் கிளைத் தலைவருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தெரிவித்தார்.

சுவாமி விவேகானந்தர் தின விழாவில் தமிழக அரசின் 'ஆஸ்தான கவிஞர்' கவிஞர் கண்ணதாசன், கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு சொற்பொழிவுகள் ஆற்றவுள்ளார். இரு தமிழக அமைச்சர்களும் இவ்விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவிற்கான ஒழுங்குகளைக் கவனிக்கும் முகமாக விழாக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.



(உடுப்பிட்டி நிரு)

# சபைக்கு வந்த கடல் ஆமை!

[யாழ்ப்பாணம்]

இலங்கை அரசாங்கத்தினால் ஆமைபிடிக்கக்கூடாது என்ற தடையை புனராலோசனை செய்யும்படி யாழ் எம். பி. மூலமாக ஜனாதிபதியையும், கடற்றொழில் அமைச்சரையும் கோரும் தீர்மானம் யாழ் மாநகரசபையில் நிறைவேறியது.

திரு யோ. அ. செல்வநாயகம் இப்பிரேரணையைக் கொண்டு வந்து பேசுகையில் கூறியதாவது! 'இலங்கையில் பல ஆண்டு காலம் ஆமைபிடிக்கப்பட்டுவந்தது இன்று தடை விதிக்கப்பட்டுள்ளதால் தொழிலாளர் வேலையின்றிக் கஷ்டப்படுகின்றனர். ஆமைபிடிப்பது, தேசிய இனத்தை அழிப்பது என்பதால் தடைவிதிக்கப்பட்டுள்ளது இந்திய ஆமைகள் இங்கு உணவுதேடி வருகின்றன. இந்திய ஆமையைத்தான் தொழிலாளர்கள் பிடித்துவந்தார்கள்.

'ஆமை இறைச்சி பலநோய்களுக்கு நல்லது என்று வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்துள்ளனர்' இலங்கையில் உற்பத்தியாகும் ஆமையை கடற்றொழிலாளர் பிடிப்பதில்லை. இந்திய ஆமையைத்தான்பிடிக்கிறார்கள் இதனால் அந்நியச் செலாவணியும் கிடைக்கும்'

திரு அலோசியஸ்: ஆமை400 வருடங்களுக்குமேல் வாழ்கின்றது ஆதலால் ஆமை இறைச்சி சாப்பிட்டால் கூடிய நாட்கள் வாழலாம்.

திரு ஏ. துரைராஜசிங்கம்: 'நான் சைவசமயத்தைச் சேர்ந்தவன்! கொலைசெய்வது பாவம் என்று சமயம் கூறுகிறது, அதனால் நான் இதில் பங்குபற்றவில்லை'

திரு செல்வநாயகம்: ஆமையைக் கொன்றால் பாவம்; ஆடு மாடுகளை வெட்டினால் பாவமில்லையா? ஆடு, மாடுகளை வெட்ட மாநகரசபையே அனுமதிக்கிறது.

திரு. எஸ் குமாரவேலு: பௌத்தசமயம் நாகபாம்பு, உடும்பு ஆகியவற்றை கொல்லக்கூடாது எனப்போதிக்கிறது. அதனால்தான் இந்தத் தடை என்பதை அறியவேண்

[7-ம் பக்கம் பார்க்க]

★ அமரர் நாகநாதன் வெண்கலச்சிலை

# ஒரே நாளில் 200 ருத்தல் உலோகம் அன்பளிப்பு

## சிலை அமைப்புக்குழு தீவிரமாகச் செயல்படுகிறது

(யாழ்ப்பாணம்)

அமரர் நாகநாதனுக்கு வெண்கலச்சிலை நிறுவுவது தொடர்பாக நல்லூர்த்தொகுதியில் பொதுமக்களிடமிருந்து பித்தளை, வெண்கலம் ஆகிய உலோகங்களை சேகரிப்பதற்கான இயக்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது. சிலை அமைப்புக் குழுத்தலைவர் அதிபர் திரு. மு. சிவசிதம்பரம் எம். பி. தலைமையில் வண்ணை ஆனந்தன், சி. பொ. வேலாயுதபிள்ளை, பெ. கனகசபாபதி உட்பட பல தொண்டர்கள் பங்கேற்றனர்.

யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரனும் தொண்டராக பங்கேற்றார். டாக்டர் நாகநாதனை மறவாத நல்லூர்த்தொகுதிமக்கள் மகிழ்வுடன் உலோகங்களை அன்பளிப்புச்செய்தனர்.

கடந்த ஞாயிறுமட்டும் சுமார் 200 ருத்தல் நிறையுடைய உலோகங்கள் அன்பளிப்பாகக்கிடைத்தன.

எதிர்வரும் 5-ம் திகதி மீண்டும் திரு. மு சிவசிதம்பரம் தலைமையில் இக் குழுவினர் உலோகங்கள் சேகரிப்பதில் ஈடுபடவிருக்கின்றனர்.

மற்றத் தொகுதிகளுக்கும் இவ்வியக்கத்தை மிக விரைவில் விஸ்தரிப்பதற்காக, சிலை அமைப்புக்குழுச் செயலாளர் வண்ணை ஆனந்தன் ஒழுங்குகளை செய்துவருகின்றார். உலோகங்களை இப்பணிக்கு அன்பளிப்புச் செய்ய விரும்புவர்கள் நேரில் நல்லூர் எம். பி. அலுவலகத்தில் ஒப்படைத்து, பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம் என்று சிலை அமைப்புக்குழுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

### மக்கள் கருத்து

## பாடசாலை நேரமாற்றம் மறுபரிசிலனை வேண்டும்

யாழ்ப்பாணத்திலுள்ள சென் ஜேம்ஸ் வித்தியாலயம் இந்தத் தவணை தொடக்கம் காலை 8 மணியிலிருந்து பி. ப. 2 மணிவரை ஒருநேரப் பாடசாலையாக மாற்றப்பட்டுள்ளதால் அங்கு பயிலும் மாணவர்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாக வேண்டியுள்ளது.

வேம்படி மகளிர் கல்லூரியின் ஐந்தாம் வகுப்புக்குக் கீழுள்ள வகுப்புகள் மூடப்பட்டதால் இப்பாடசாலைக்கு கந்தர்மடம், வண்ணார்பண்ணை, நல்லூர், திருநெல்வேலி முதலிய இடங்களில் இருந்தெல்லாம் சிறவர்கள் குறிப்பாக ஐந்தாம் வகுப்புக்குக் கீழுள்ள பாலர்கள் வாகனங்களிற் படிக்க வருகின்றார்கள். அயலிலுள்ள பாடசாலைகளெல்லாம் இருநேரப் பாடசாலைகளாகவே நடைபெறுவதால் இப்பாடசாலைக்குக் காரில் வரும் பிள்ளைகள், மற்றப் பாடசாலைகளுக்கு வரும் கார்களின் நேரத்துடன் ஒத்துப்போகவும் முடியாதிருக்கின்றது! தூரத்துப் பிள்ளைகள் வழமைபோலச் சாப்பாட்டைக் கொண்டு வந்து இடைவேளையிற் சாப்பிட்டுவிட்டுத் தொடர்ந்து படித்தாலும்; அயற்பிள்ளைகள்- வறியபிள்ளைகள்-சாப்பாடுகட்டிக் கொண்டு வரமுடியாது இதனால் கடைசிப் பாடங்கள் உற்சாகமின்றியே கழியும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது இந்த மாற்றம் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயற்குழுவால் மேற்கொள்ளப்பட்டதாக அறிக்கப்பட்டுள்ளது. உண்மையில் பா. அ. ச. பொதுச்சபை கூட்டப்பட்டிருந்தால் ஒரு போதும் இந்த மாற்றம் நடைபெற்றிருக்கமுடியாது என்பதே எங்கள் கருத்து

இந்த மாற்றத்தினால் சிலருக்கு ஏதாவது நன்மை கிடைக்குமாயினுங்கூட, பிள்ளைகளுக்கு பெருத்த நஷ்டமே ஏற்பட்டுள்ளது. ஆதலால் பிள்ளைகளின் நன்மையைக் கருத்திற் கொண்டு பாடசாலையாக அதிபரும் பா. அ. ச. செயற்குழுவும், கல்வித் திணைக்களமும் இந்த மாற்றத்தை மறு பரிசிலனை செய்து பழையபடி இருநேரப் பாடசாலை மாற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி ம. தியாகராசா
சந்நர்மடம்

# நாட்டின் கூட்டுறவுதுறையில் யாழ். மாவட்டம் முன்னணி!

## உடுப்பிட்டி எம்.பி. பெருமிதம்

[நெல்லியடி-உடுப்பிட்டி]

"கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் கூட்டுறவு வளர்ச்சியில் அரசியல் கலக்கக் கூடாது சங்கங்கள் சமுதாயம் என்ற உணர்வில் இயங்கும்போது அரசியல் என்ற கலப்பு ஒருபோதும் அங்கு அனுமதிக்கக்கூடாது. இந்தநாட்டின் கூட்டுறவுத்துறை வரலாற்றைப் பொறுத்தவரையில் யாழ் மாவட்டம் முன்னணியில் நின்று முக்கிய இடத்தை வகிப்பது பெருமைக்குரியது அந்தவகையில் வடமராட்சிப் பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றலும் அனுபவமும் மிக்கவர்களைக் கொண்டு இயங்குவது பாராட்டுக்குரியது."

இவ்வாறு, நான்குலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா செலவில் நெல்லியடியில் புதிதாக நிறுவப்பட்ட கட்டைவேலி-நெல்லியடிப் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் இருமாடிக் கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் உடுப்பிட்டி எம். பி திரு த. இராசலிங்கம் கூறினார். இத்திறப்புவிழா சங்கத்தலைவர் திரு த. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. உடுப்பிட்டி எம் பி திரு. த. இராஜலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இரு உள்ளூராட்சிப் பகுதிகளைக்கொண்ட கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் 23 ஆயிரம் மக்களை அங்கத்தவர்களாகக் கொண்டு கூட்டுறவுத்துறைக்குச் சேவையாற்றிவருகிறது யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம்தான் தொகையில்கூடிய அங்கத்தவர்களைக்கொண்டு இயங்கி வருகின்றது. இது ஒரு சாதனையாகும்.

"நாட்டுமக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்துகொண்டு போகும் இத்தருணத்தில் சாதாரண பாமரமக்கள் கறுப்புச் சந்தைக்காரர், பதுக்கல்பேர்வழிகளை விரட்டியடிக்கவேண்டியது அவசியமாகின்றது இத

[7-ம் பக்கம் பார்க்க]

# இந்துமதம் பின்தள்ளப்படுவதற்கு என்ன காரணம்?

## சுவாமி ஸ்ரீ பரமானந்தஜீ விளக்கம்

(உடுப்பிட்டி)

"உலகில் உள்ள மதங்களுள் எமது இந்து மதமே கட்டுப்பாடில்லாத முறையில் இருந்து வருகின்றது எமது மதத்திற்குப் பொறுப்பான, அதிகார பூர்வமான சபையொன்று இல்லாததால் எமது சமயம் பின்தள்ளப்பட்டு வருகின்றது. கிறீஸ்தவர்கள் உலக ரீதியாக கட்டுப்பாட்டுடன் இயங்கி வருவதால் தமது ஆலயங்களை நல்ல முறையில் நிர்வகித்து வருகின்றார்கள்"

இவ்வாறு அல்வாய் ஸ்ரீ பரமானந்த ஆச்சிரமத்தில் நடைபெற்ற உலக இந்து மகாசபையின் இலங்கைக் கிளைப் பிரதிநிதிகள் கூட்டத்தில் பேசுகையில் ஆச்சிரம அதிபர் சுவாமி ஸ்ரீ பரமானந்த ஜீ அவர்கள் தெரிவித்துள்ளார். யாழ். அரசாங்க அதிபரும், உலக இந்து மகாசபையின் இலங்கைக் கிளைத் தலைவருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. சுவாமி ஸ்ரீ பரமானந்த ஜீ தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இந்து சமயத்தை வளர்த்து சரியான முறையில் கட்டி எழுப்ப வேண்டும். இப்பெரும்பொறுப்பை நாம் எல்லோரும் ஏற்று நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு எமக்கு ஏற்பட்டுள்ளது:

"எமக்குள் திட்டங்களை உருவாக்கிச் செயல் படுத்தும் ஆற்றல் அவசியம்; எமது மதத்தின் வளர்ச்சிக்கு பணம் படைத்த இந்து சமயத்தவர்களுடைய பொருள் உதவி புரிய முன்வருகின்றனர். பொருளுடை போர்த்திலுமே நிதி உதவியும் பெறலாம் என்ற நிலை மாறவேண்டும். அப்பொழுதே, எமது சமயம் வளரும்" என்று கூறினார்.

ஊனஞர் சேவை:

# ழியர்களுக்கும் யர்வு வழங்குக

## ண்டுகோள்

கட்டியில் பகாராட்டில் ணக்கவிலப்பட்டது. நாட்டில் எடுக் வுகள் அரசின் இருந்த உருகி யில், அண்மை ரம் தரப்பதவி வழங்க பதவி லெருக்கு உரிய நியமனம் நடந்த ஜனவரி டுத்த முடிவுகளு லை அளிக்கப்படு அரசாங்க எழுது கம் பொது நிர் ட்டு அமைச்சில் ல் மேற்கொள் ளப்படுவதாகவும் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஏற்கனவே எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

இதனைத் தொடர்ந்து 1-ம் தரப்பதவி உயர்வு தொடர்பாக தமது முன்னைய கடிதங்களை நினைவு கூர்ந்து பொது நிர்வாக அமைச்சருக்கு எதிர்க்கட்சி முதல்வர் எழுதிய கடிதத்தில் பொது எழுது வினைஞர் சேவையில் உள்ள எல்லா பழைய தமிழ் ஊழியர்களுக்கும் உரிய திகதியிலிருந்து பதவிகளை வழங்குமாறு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். [இ]

## வீச்சில் செயல்படும் லவழங்குப் திட்ட

லோலி) மாவட்ட அமைச் ளரும், அரசாங்க திரு. யோகேந் சுவாமி தலைமை பெரடங்கிய வேலை , பல்வேறு நிலைக் . கூட்டுத்தாப உள்ள வெற்றி நிரப்புவதற்காக மாசச் சிபாரிசு தகுதியான ம், அவ்வத் ளிலும் கூட் டுத்தாபனங்களிலும் நேர் முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்பட்டு வருகின்றனர்

நேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்ததும் வெகு விரைவில் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, யாழ் மாவட்டத்திலுள்ள இளைஞர்களும், யுவதிகளும் வேலை கோரி திரு. யோகேந்திரா துரைசுவாமியிடம் விண்ணப்பித்தபடி இருக்கிறார்கள்

# "200 குடும்பங்கள் வசிக்க வீடு வேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"குருநகர் றெக்கிளமேசன் வட்டாரங்களில் நிலப்பரப்பு குறைவு. அமரர் ஜி ஜி பொன்னம்பலம் மீன்பிடி அமைச்சராக இருந்தபோது அங்குள்ள நிலத்தை தொழிலாளர்களுக்கே ஒதுக்கினர். இன்று அந்த நிலத்தில் பொலீஸ்-இராணுவத்தினருக்கு விடுதி அமைக்கவிருப்பதாக அறிகிறேன்"

குருநகர் றெக்கிளமேசன் வட்டாரங்களில் 200 குடும்பங்கள் வசிக்கக்கூடிய மாடி வீடுகளைக் கட்டவேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசிய திரு. யோ அ செல்வநாயகம் மேற்கண்டவாறு கூறினர்.

அத்தீர்மானம் வருமாறு:- "குருநகர் றெக்கிளமேசன் 2, 3, 5ம் வட்டாரங்களில் வசிக்கும் வீடற்ற வறிய மீனவர்களும் சிறு தொழிலாளர்களும் உட்பட மாக அந்தோரின் இருக்கும் மீதி நிலத்தில் 200 குடும்பங்கள் வசிக்கக்கூடிய வகையில் மாடிவீடுகளை அமைத்து அவற்றை மாநகர சபையின் பொறுப்பில் விநியோகிப்பதற்கு தந்திரவலிப்படி அரசை இச்சபை கேட்டுக்கொள்கிறது."

திரு செல்வநாயகம் இத்தீர்மானம்மீது பேசும் கூறியதாவது: "சகல பயிற் ஒரு நகரில் அரசுபத்து வீடுகளைக் கட்டியது, அதை வழங்குவதில் அரசாங்க அதிபருக்கும் யாழ்ப்பாண எம் பிக்கும் போட்டி ஏற்பட்டுள்ளது. ஆதலால் இந்த 200 வீடுகளையும் கட்டி மாநகரசபையின் பொறுப்பில் தரவேண்டும். உண்மையில் வீடில்லாதவர்களுக்கு இவற்றை வழங்குவோம். இந்நிலத்தை பொலிஸ், இராணுவத்துக்கு வழங்காமல் தொழிலாளருக்கு வழங்க யாழ். எம்பி பெரும் முயற்சி எடுத்துள்ளார்"

இத்தீர்மானம் நிறைவேறியது!

திரு. செல்வநாயகம் கொண்டுவந்த கீழ்காணும் தீர்மானமும் நிறைவேறியது! 'வெளிநாடுகளிலிருந்து யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு அனுப்பப்படும் பொதிகளை பெறுவதற்கு வெளியூர்புக்கு செல்லவேண்டியிருப்பதால் அவற்றை இங்கு பெற்றுக்கொள்ளக் கூடிய முறையில் சுங்கச்சபையிடம் கேட்டுக் கொள்கிறது. [ஈ]

லக்கைப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நுதவில் பரிசீலனை செய்யப்பட்ட பின்னரே அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பரி. யோவான் வெற்றி

(அரியாலை)

யாழ். பரி. யோவான் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான ஹாக்கி போட்டியில் பரி. யோவான் கல்லூரி கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

அந்நியச்சேமிப்பாக

# $1\frac{1}{2}$ லட்சம் ரூபா

## காங்கேசனில் சாதனை

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்த உணவுக் கப்பலின் இறக்குமதி வேலைகள், குறிப்பிட்ட தினங்களுக்கு முன்னரே முடிவு பெற்றதினால் உணவு இலாகாவுக்கு அந்நியச் சேமிப்பாக ஒன்றரை லட்சம் ரூபா கிடைத்துள்ளது

பங்களாதேச கப்பல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான "எம். வி. பங்களா கடபளர்" என்ற கப்பல், பிரான்ஸ் தேசத்திலிருந்து இரண்டு லட்சம் மாமூடைகளுடன் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்தது இக்கப்பலின் இறக்குமதி வேலைகளை பதினுன்கு நாட்களில் செய்து முடிப்பதற்கு கப்பல் கம்பனியுடன் உணவுக் கமிஷனர் ஒப்பந்தம் செய்திருந்தார்

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு இக்கப்பலை திசைதிருப்பி, துரித வேலைகளை மேற்கொண்டதனுல் குறிப்பிட்ட தினங்களுக்கு ஆறு நாட்கள் முன்னதாக

[8ம் பக்கம் பார்க்க]

## "மரங்களை பெருமளவில் நாட்டுங்கள்"

[புலோலி]

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நில நீர் பாதுகாக்கப்படவேண்டியது முக்கியமானதாகக் காணப்படுவதால் இப்பகுதிகளில் மரங்களைப் பெருமளவில் நாட்டுவதற்கு மக்கள் அதிக ஆர்வம் கொள்ளவேண்டுமென்று புலோலி சமநலச் சேவை நிலைய விவசாயப் போதனுசிரியர் திரு பி பொன்னையா இப்பகுதிமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்

புலோலி சமநலச்சேவை நிலையமும், விவசாயத்திணைக்களமும் ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தனவின் பிறந்த தின மான செப்டெம்பர் மாதம் 17ம் திகதி, பல்லாயிரம் மரங்களை இப்பகுதியில் நாட்டி, மரம் நாடுதல் விழாவைச் சிறப்பாகக் கொண்டாட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன


## அடுத்த...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பெல்கட்சிகள் கல்லது குழுக்கள் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு வேண்டிய வாக்குகளின் எண்ணிக்கைபற்றிய தாகும். இப்போது 12.5சத விகிதத்துக்குக் குறைவான வாக்குகளை பெறும் அரசியல் கட்சிகளுக்கு பிரதிநிதித்துவம் கிடையாது. 12.5 சதவிகிதத்தை 8 சதவிகிதமாகக் குறைக்க அரசு ஆலோசித்து வருகிறதாக அறியப்படுகிறது.


அதி சக்தி மிகுந்த இரு சக்கர உழவு யந்திரங்கள்
தற்பொழுது இலங்கை வந்துள்ளன

10 குதிரைப்பலமுள்ள "சக்தி"




இந்தியாவில் வெற்றியீட்டிய 10. கு. ப. 'சக்தி' இலங்கைப் பண்ணைகளிலும் தனது திறனை நிரூபித்துள்ளது. இவை மகா இலுப்பல்லமையில் உள்ள உழவு யந்திரப் பரீட்சை நிலையத்தினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

தற்சமயம் பண்ணைகளிற் பாவனைக்குள்ள 5/6 கு. ப. உழவு யந்திரங்களை விட 'சக்தி' பல நன்மைகள் கொண்டவையாகும்.

- கு. ப. வரிசையில் லாபகரமானது.
- விரைவான இயக்கத்தினால் நேரத்தை மிதமாக்குகிறது.
- ஏக்கர் அளவில் உழுவதிற் சிக்கனமானது.
- உலர்ந்த, கடின நிலத்திலும் திறம்பட இயங்குகிறது.
- ஈரலிப்பு, சதுப்பு வயல்களிலும் இலகுவிற் கையாளவல்லது.
- பாரிய சுமைக்கு விசாலித்த இடமும், ஏற்றி இறக்க ஏற்ற விரைவும் பூண்டவை (2 தொன்)
- குறைந்த பராமரிப்புத் தொல்லைகள் உடையவை

யப்பானிய 'மிற்சுபிஷி' கெவி இண்டஸ்ரீஸ் கூட்டுத் தயாரிப்பிலானவை

'சக்தி'- சக்தி மிகு இரு-சக்கர உழவு யந்திரம்.

விற்பனை, பராமரிப்பு, உதிரிப்பாகங்களுக்கு தொடர்பு கொள்க.

யுனைற்றட் டிரக்ரேஸ் அன்ட் இக்குப்மென்ற் லிமிட்டெட்
447, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. தொலைபேசி: 93461-2.

திருச்செல்வம் அன் கொம்பனி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

MASTERS

# இந்தியத் தேர்தலில் தேசாய் போட்டியிடார்

## நிருபர்களிடம் அவரே கூறினர்

புதுடில்லி, ஆக. 30

எதிர்வரும் இந்திய பொதுத்தேர்தலில் தாம் போட்டியிடப்போவதில்லை என்று முன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார்.

ருஜ்கோர்ட்டில் நிருபர்களிடம் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

தமது மனச்சாட்சியின் படியே தாம் இம்முடிவை எடுத்துள்ளதாகவும் திரு. தேசாய் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: லோகசபையைக் கலைத்ததற்கு எதிராக ஜனதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டிக்கு எதிராக எடுக்கப்படும் எந்தக் கிளர்ச்சிக்கும் நான் ஆதரவு அளிக்கமாட்டேன்.

ஜனதிபதி தவறு இழைத்திருந்தால் அது குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்கலாம் என்பதே எனது கருத்து. [இ]

## "அயத்தொல்லாவின் பயமுறுத்தலுக்கு குர்திஷ் இயக்கம் மண்டியிடாது"

தெஹ்ரான் ஆக 30

ஈரானிய அரசிடம் சரணடையுமாறு சமயத்தலைவர் அயத்தொல்லாகோமெய்னி விடுத்துள்ள கோரிக்கையை நிராகரித்துள்ள குர்திஷ் படையினர் தொடர்ந்து தீவிரமாக சண்டையிட்டு வருகின்றனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குர்திஷ் படைகள் தொடர்ந்து போராட்டம் நடத்தப் போவதாகவும் குர்திஷ் இயக்கம் அறிவித்துள்ளது. அயத்தொல்லா கொமெய்னியின் பயமுறுத்தலுக்கு தமது படைகள் மண்டியிடத் தயாராக இல்லை என்று அரசினால் தடை செய்யப்பட்டுள்ள குர்திஷ் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். [இ]

## இந்திரா காங்கிரஸில் சேரவேண்டாம்

### காங்கிரஸ் கட்சியினருக்கு சந்திரசேகர் வேண்டுகோள்

புதுடில்லி ஆக 30

எச்சந்தர்ப்பத்திலும் என்ன காரணம்கொண்டும் இந்திரா காங்கிரஸ்கட்சியில் சேரவேண்டாம்.

இவ்வாறு உத்தியோகபூர்வ காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கு ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சகல அரசியல் கட்சிகளும் இடைக்காலத் தேர்தலுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டு வரும் இவ்வேளையில் திருமதி இந்திராகாந்திக்கு செல்வாக்கு அதிகரித்து வருவதை அடுத்து காங்கிரஸிலிருந்து அநேகர் இந்திரா காங்கிரஸில் சேர்ந்து வருவதைத் தொடர்ந்தே திரு சந்திரசேகர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார். [இ]

## மாயத்தேவர்-கருணநிதி சந்திப்பு

சென்னை ஆக 30

அ தி மு க விலிருந்து ராஜினமாச் செய்த முன்னள் எம் பி திரு கே மாயத்தேவர் தி மு க தலைவர் திரு மு கருணநிதியை நேற்று சென்னையில் சந்தித்து பேச்சு நடத்தினர்.

தமிழ்நாட்டின் அரசியல் நிலை குறித்து தாங்கள் இருவரும் பேச்சு நடாத்தியதாக திரு மாயத்தேவர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இன்னும் ஒருவார காலத்தில் தாம் தமது எதிர்கால நிலைமை குறித்து அறிவிக்கவுள்ளதாகவும் அவர் கூறினர். [இ]

### காபந்து அரசு மீது வழக்கு

புதுடில்லி, ஆக 30

இந்தியாவில் காபந்து அரசுக்கு பெட்ரோலியப்பொருட்களை, நிலக்கரி ஆகியவற்றின் விலைகளை அதிகரிக்க அதிகாரம் கிடையாது என்று மேற்கு வங்காள அரசு காபந்து அரசுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது [இ]

### காந்தி—காமராஜ் காங்கிரஸ் மகாநாடு

சென்னை ஆக 30

திரு குமரி அனந்தன் தலைமையிலான காந்தி—காமராஜ் தேசிய காங்கிரஸின் முதலாவது மகாநாடு அக்டோபர் 6, 7ம் திகதிகளில் சென்னையில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [இ]

### லட்சம் பவுண் சன்மானம்

லண்டன், ஆக. 30

மவுண்ட் பேட்டன் பிரபுவைக் கொலை செய்த கொரில்லாக்களைக் கைது செய்யக் கூடிய தகவல்களைத் தருபவர்களுக்கு ஒரு லட்சம் பவுண் ஸ்டேர்லிங் சன்மானமாக வழங்கப்படும் என்று அயர்லாந்து அரசாங்கம் அறிவித்துள்ளது. [இ]


வீடு கட்டுதல், சுவர் எழுப்புதல், தரை அமைத்தல்...


எதுவாயினும் பாவியுங்கள்

மேசன் வேலைக்கான சீமெந்து

மேசன் வேலைக்கான சீமெந்து, வீட்டு நிர்மாணத்தில் ஒரு புதுமையாகும், இது சிக்கனமானது, மலிவானது. சீமெந்துக்கான அமெரிக்க தர நிர்ணயத்துக்கு இணங்கியது. போர்ட்லண்ட் சீமெந்தைப் போலவே இதனையும் பாவிக்கலாம். சீமெந்து / மணல் விகிதாசாரம் போர்ட்லண்ட் சீமெந்துக்குப் போலவேயாகும். மேசன் வேலைக்கான சீமெந்துக்கு சுண்ணாம்பு தேவையில்லை. மணல், சீமெந்து, தண்ணீர் இவை மூன்றுமே போதும், கலவை பூரணமாகிவிடும்.

மேசன் வேலைக்கான சீமெந்து கொண்டு கட்டடச் செலவைக் குறையுங்கள்:

- கொங்கிறீட் வேலைக்குப் பயன் படுத்தக்கூடாது. 50 கி. கிரும் கொண்ட ஒரு பை மேசன் வேலைக்கான சீமெந்தின் விலை:
- புத்தளம் அல்லது காங்கேசன்துறைத் தொழிற்சாலையிலிருந்து ரூபா 17/90
- காலி தொழிற்சாலையிலிருந்து ரூபா 20/80.



இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்

தபால் பெட்டி 1382, சுதந்திர சதுக்கம், கொழும்பு-7. தொலைபேசி: 95628. 95801-4.

கஜேந்திரா தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ். நகர்) இன்று மட்டும்
சிவாஜி-கே. ஆர். விஜயா
இருமலர்கள்
1-9-79 முதல் பொற்சிலை

REGAL (Jaffna) 3rd CROWDED WEEK LAST FEW DAYS
Daily 10-30, a. m 2-00, 4-30, 7-00 p.m. only
THE OMEN
"ஆவிகளின் அட்டகாசம்"
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(FOR ADULTS ONLY)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30
றிவோல்வர் ரீட்டா

லிடோ (யாழ். நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

4th & FINAL WEEK
SRIDHAR-Jaffna Phone: 7345
at 10-30 a.m., 3-00, & 7-30 p.m.
Don't miss this great film for the last time in Jaffna.
CECIL B DEMILLE'S
TEN COMMANDMENTS
பத்துக் கட்டளைகள்
(புதிய டெக்னி கலர் — தமிழில்)
Color
Schools contact Management for Special shows.

ராணி (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி-தேவிகா
சுமைதாங்கி
(புதிய பிரதி)
கதை, வசனம், டைரக்ஷன்: ஸ்ரீதர்

ராஜா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா-நாகேஷ் நடித்த
அன்னமிட்டகை
(புதிய பிரதி)

SHANTHI JAFFNA. Phone: 7642
Daily 10-30, 2-30, 6-30, & 9-30 P. M.
DILIPKUMAR—NADIRA in
AMAR (அமார்)
HINDI
Action Packed Movie
சண்டைகள் நிறைந்த படம்

வின்ஸர் யாழ்ப்பாணம் (தென்னிந்திய நடிகர்) தினசரி 4 காட்சிகள்
காலை 10 30, பி.ப.2-00, மாலை 6-00, இரவு 9-30 (கோமாளிகள் புகழ்)
எஸ். வி சுப்பையா, ஜெயா, மீரா, ராம்தாஸ் உதயகுமார் நடித்த
மாமியார் வீடு
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. வெங்கட்


## நிதிசேகரிக்க முடிவு

[பண்டத்தரிப்பு]

தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதிக்கு, வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் மூலம் பொதுமக்களிடமிருந்து நிதிசேகரித்து வழங்குவதென்று வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழர் விடுதலை கூட்டணி மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தகவேணியிலுள்ள த. வி. கூட்டணி மத்திய அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி திரு தா திருநாவுக்கரசு தலைமை வகித்தார். சகல கிளைகளும் புதிய உறுப்பினர்களை சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## இயக்குநர் தெரிவு

[புலோலி]

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம் செப்டெம்பர் மாதம் 16-ம் திகதியும், புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர்களைத் தெரிவு செய்வதற்கான பொது கூட்டம் செப்டெம்பர் மாதம் 23-ம் திகதியும் நடைபெறவுள்ளன. இப்பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படும் இயக்குநர்களே இச்சங்கங்களின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்று நடத்துவார்களெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சபைக்கு...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

டும், ஒரு தீர்மானத்தைநிறைவேற்றும்போது அதனை அரசு ஏற்குமா என்பதை நாம் சிந்திக்கவேண்டும்.

திரு செல்வநாயகம்: உயிர்க்கொலை பாவம் என்று சமயங்கள் கூறினாலும், இங்கு நடப்பது என்ன? உடல்வளர்ச்சிக்கு இறைச்சி அவசியம். பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். சமயங்கள் உயிர்க்கொலைபாவம் என்கின்றன. ஆனால் தினமும் கொலைகள் நடக்கின்றதே.

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (க)

## நாட்டின்...

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

திரு இத்தகைய பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களே முன்வரவேண்டும். கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சி அச்சங்கத்தின் தலைவரிலோ அல்லது இயக்குநர் சபையிலோ தங்கியிருக்கவில்லை. ஊழியர்கள் பாவனையாளர்கள் ஆகியோரின் ஆதரவும் ஒத்துழைப்புமிருந்தாலே சங்கம் முன்னேறும்''


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்-
கே. ஆர். விஜயா
மேஜர் மீனாட்சி

வெலிங்டன்(?) — வெல்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எஸ். எஸ் ஆர்.
ராஜசுலோசனா
சங்கிலித்தேவன்

RIO (Jaffna- TwonHall)
Phone: 7697
4th & FINAL WEEK
Daily 4 Shows
DRIVER


துரையப்பா விளையாட்டரங்கு

# பெயர்மாற்றம் பற்றி சட்ட ஆலோசனை!

[யாழ்ப்பாணம்]

யாழ். விளையாட்டரங்கின் பெயர்மாற்றம் சம்பந்தமாக சட்ட ஆலோசனை கோர வேண்டுமென்ற தீர்மானம் யாழ். மாநகரசபையில் நிறைவேறியது.

யாழ் மாநகரசபைக் கூட்டம் நகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. சே. சிவரத்தினம் மேற்கண்ட தீர்மானத்தைக் கொண்டுவந்தார். தீர்மானத்தின் முழு விபரம் வருமாறு:

''குருநகரில் இருக்கும் தங்கம்மா பிரசவவிடுதி மற்றும் சுப்பிரமணியம் பூங்கா போன்றே யாழ். விளையாட்டு அரங்கும் ஒரு நம்பிக்கைச்சொத்து. சபையிடம் நம்பிக்கைச் சொத்தாக கையளிக்கப்பட்ட சொத்துக்களின் பெயர்களை மாற்றுவது சம்பிரதாயம் அல்ல. அது சட்டமுறையானதாகவும் இராது என்பதே பொதுப்படையான கருத்தாகும். ஆகவே யாழ் விளையாட்டரங்கின் பெயர் மாற்றம் சம்பந்தமாகசட்ட ஆலோசனை கோரவேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது''

திரு. மரியாம்பிள்ளை (தமிழ் காங்கிரஸ்): நம்பிக்கைச் சொத்து பெயரை மாற்றுவது சட்டத்திற்கு மாறானது.

திரு. சிவரத்தினம் (கூட்டணி): தங்கம்மா பிரசவவிடுதி, சுப்பிரமணியம் பூங்கா போன்றே யாழ் விளையாட்டு அரங்கிற்கு பெயர் சூட்டியுள்ளனர். திடீரென துரையப்பா விளையாட்டு அரங்கு எனப் பெயர் மாறியுள்ளது. இது சட்டபூர்வமானதா? அல்லது சொந்த முயற்சியில் மாற்றப்பட்டதா? என்பதை அறிய வேண்டும். சட்டபூர்வமானதென்றால் ஏற்றுக்கொள்ளலாம். சொந்த முயற்சியின் காரணமாக பெயர் மாற்றப்பட்டதென்றால் இதுபற்றி ஆராயவேண்டும்.

திரு. மரியாம்பிள்ளை: துரையப்பா விளையாட்டு அரங்கு என்பதுதான் தற்போது அந்த அரங்கிற்கு உள்ள பெயராகும். இப்பிரேரணையில் யாழ். விளையாட்டு அரங்கு என்று புதிய பெயரை சூட்டியுள்ளார். இப்படி எப்போ மாற்றப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# "கல்விக்குச்செலவிடும் ஒவ்வொரு சதமும் ஆக்கபூர்வமான முதலீடு"

[சங்கானை]

''கல்விக்குச் செலவிடும் ஒவ்வொரு சதமும் ஆக்கபூர்வமான முதலீடாகும். ஆகவே ஆசிரியர்கள் மிகவும் பொறுப்புடன் செயலாற்றவேண்டும். தொழிற்சாலைகள் அழிந்தால் மீண்டும் கட்டிக்கொள்ளலாம். ஆனால் மாணவர்களின் இளைய பராயம் பாழானால் மீண்டும் சீராக்கமுடியாது''

மாங்குளம் வட்டாரக் கல்வி அதிகாரி திரு மு சிவானந்தம் கல்விளாங்குளம் அ. த. க. பாடசாலையில் நடைபெற்ற பெற்றோர் தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அதிபர் ஆ சண்முகராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை துணுக்காய் கூலர் அரசாங்க அதிபர் திரு மு கார்த்திகேச மங்களவைச் சேர்ந்து ஆரம்பித்துவைத்தார். சாவகச்சேரி அபிவிருத்தி அதிகாரி ஐ சிவசாமி அதிதியாகக் கலந்துகொண்டார். மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும், பழைய மாணவர்களின் நாடகங்களும் இடம் பெற்றன.

## விதை உருளைக்கிழங்கு விநியோகம்

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் உருளைக்கிழங்கு உற்பத்தியை ஊக்குவிக்கு முகமாக இப்பகுதி விவசாயிகளுக்கு இறக்குமதி செய்யப்பட்டவிதை உருளைக்கிழங்கு வழங்கப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை அவ்வப்பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் விவசாயிகளிடம் கோரியுள்ளனர்.

புலோலி கப்பல் சமநலச் சேவை நிலையங்கள் மூலம் இவ்விதை உருளைக்கிழங்குகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. வடமராட்சி விவசாயிகளுக்கென பத்துத்தொன் விதை உருளைக்கிழங்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இன்று சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் இன்றுமாலை பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம செயலாளர் பிர இரத்தினசபாபதி "ஆத்மீக சன்மார்க்க நெறி" என்ற தொடரில் சொற்பொழிவாற்றுவார்

## இதுவரை 8 பேர் பலி!

பட்னா, ஆக. 30

பிகார் மாநில நகரமான ஜாம்ஷெட்பூரில் கடந்த இரண்டு நாட்களாக இடம்பெற்ற கலவரத்தினால் இதுவரை 8 பேர் பலியாகியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் உலக சாதனை முயற்சி

[ஊரெழு]

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நீண்டநேர சைக்கிள் ஓட்டத்தில் உலக சாதனையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு உடல்நலக் குறைவால் இடைநடுவில் முயற்சியைக் கைவிட்ட சுன்னாகம் வளர்பிறை விளையாட்டுக் கழகத் தலைவர் திரு எஸ் ஐ செல்வராசா மீண்டும் தனது முயற்சியைத் தொடங்கவிருக்கிறார்.

நாளை சனிக்கிழமை மல்லாகம் கோட்டைக்காடு அரசாங்க தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகிலுள்ள மைதானத்தில் இவரது சாதனை ஆரம்பமாகவிருக்கிறது. தெல்லிப்பழை லயன்ஸ் கழக ஆதரவுடன் நடைபெறும் நீண்டநேர சைக்கிள் ஓட்டத்தை சுன்னாகம் பொலிஸ் அதிபர் திரு பி சுகுணேந்திரன் தொடக்கி வைப்பார்

## வள்ளத் தொழிற்சாலை

[புலோலி]

வடமராட்சிப் பகுதி மீனவர்களின் நன்மைகருதி பருத்தித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், 50,000 ரூபா செலவில் வலைத் தொழிற்சாலை ஒன்றையும் 50,000 ரூபா செலவில் உப்பு அரைக்கும் ஆலை ஒன்றையும் நிறுவுவதற்குத் தீர்மானித்துள்ளதாகச் சங்கப் பொது முகாமையாளர் திரு என். கனகசேகரம் தெரிவித்தார்.

## "நெடுந்தீவை வளம் கொழிக்கச்செய்ய

# ஒன்ருேடொன்று இணைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டம் தேவை"

### தெ. பொ. சே. கூ. சங்கம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

"இராமேஸ்வரத்துக்கு பால், பழம், பூ அனுப்பிவந்ததாக சரித்திரங்களில் கூறப்படும் நெடுந்தீவு இப்போது பாலைவனமாகக் காட்சியளிக்கிறது. எனவே இத்தீவுக்கு பரவலான ஒன்ருேடொன்று இணைக்கப்பட்ட ஒரு பொருளாதாரத் திட்டம் தேவை. இத்திட்டம் அரசாங்கத்தாலும், வங்கிகளாலும், கூட்டுறவுத்துறையாலும், தனியார் துறையாலும் வரவேற்கக் கூடியதாய் அமையவேண்டும்."

இவ்வாறு கோரும் முக்கிய தீர்மானம் அடங்கிய மகஜரை நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கம், விரைவில் நெடுந்தீவுக்கு விஜயம் செய்யவுள்ள யாழ். மாவட்ட அமைச்சர் திரு. உக்குபண்டார விஜயக்கோனுக்கும், மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கும் சமர்ப்பிக்கவுள்ளது.

அம்மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

"நாங்கள் எமது தீவுக்கு வருகைதரவிருக்கும் நாளை எமது கூட்டுறவுச் சங்கம் வெகு நாட்களாக ஆவலோடு எதிர்பார்க்கின்றது. இங்குள்ள மக்களும் தங்கள் உள்ளக்கிடக்கைகளை எவ்வாறு தெரிவிப்பது, யார் அவற்றை வெளிப்படுத்தப்போகின்ருர்கள். இத்தீவு ஒரு வளம் குறைந்த பிரதேசமாக தங்களுக்குத் தென்படும்; இது உண்மை. இந்நாட்டு மக்கள் தொடர்ந்து பல்லாண்டுகளாக தங்கள் மேல் திணிக்கப்பட்ட வாழ்க்கை முறையால் இங்குள்ள வளங்களைச் குறைவடைவிட்டார்கள். இற்றைக்கு ஐம்பது வருடங்களுக்குமுன் இங்கிருந்த சோலைக்காடுகளும், பாலைக் காடுகளும், ஏன் எமது பனைமரங்கள் தன்னும் அழிக்கப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். வெட்டப்பட்ட நீர்ப்பாசனக் குளங்கள் மண்ணரிப்பால் மூடப்பட்டு அவற்றிலிருந்து புழுதிமண்டலம் எழும்புவதை தாங்கள் காணக்கூடியதாக இருக்கும்.

இராமேஸ்வரத்திற்கு பால், பழம், பூ அனுப்பிவந்ததாக சரித்திரங்களில் கூறப்படும் நெடுந்தீவு இப்போது பாலைவனமாகக் காட்சியளிக்கின்றது.

சனங்கள் பாதுகாப்பற்று மரஞ் செடிகள் உற்பத்தியாக்க முடியாதவனாயில் இருப்பதைக் காண்பீர்கள். கட்டாக் காலிகள் உண்ண உணவின்றி, குடிக்க நீரின்றி வற்றல்களாக அசைந்துதிரிவதைக் காண்பீர்கள்.

நுகர்ச்சிப் பொருட்களின் அத்தனையும், இறக்குமதி செய்யப்படுவதையும், அவற்றின் விலைவாசிகள் யாழ். குடாநாட்டிலும் பார்க்க உயர்வாக இருப்பதையும், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 60 சதத்திற்குப் பெறக்கூடிய முட்டை இங்கு 80 சதத்திற்கும் கிடையாதிருப்பதையும் காண்பீர்கள். மண்ணெண்ணெயின் விலை புங்குடுதீவு விலையிலும், பேசத்துக்கு 20 சதம் கூடுதலாக உள்ளது.

மீன்பிடித் தொழிலில் முன்பிருந்ததைவிட, ஒரு சிறு மாற்றங்களைக் காண்பீர்கள். முன்பு கட்டுமரங்கள் சத்தமின்றி மீனோடு கரைக்குவரும்; தற்போது ஒரு சில இயந்திரப் படகுகள் சத்தமிட்டு, மீனின்றி, வலையையும் பறிகொடுத்து கரையை அடைகின்றன.

சேர் வைத்திலிங்கம் துரைசாமி எமக்கு பிரதிநிதியாய் இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கனிஷ்ட மகாவித்தியாலயம் பல துறைகளிலும் முன்னேறி பத்து வருடத்துக்குள் சிரேஷ்ட மகாவித்தியாலயமாகியது பல்வேறு கல்வித்துறைகளில். அகில இலங்கைப் போட்டிகளிலும் பங்குபற்றி பரிசில்களும் பெற்றது. வெளியூர்களிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து கல்வி பயின்ருர்கள்.

எமது உற்பத்திப் பொருட்களை வெளியேற்ற நம்பிக்கையான படகு இல்லை, பிரயாணிகளின் போக்குவரத்து எவ்வளவு சீர்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் பிரபத்தம் காட்டுகின்றதோ அதிலும் பார்க்க முக்கியமானது உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் வசதி என்பதை உணர்வதில்லை. நெடுந்தீவைப் பொறுத்தமட்டில் இதற்கு முதுகெலும்பாய் அமையவேண்டியவை பெட்டியோடு கூடிய உழவு இயந்திரமும், பொருட்களை ஏற்றிச் செல்லக்கூடிய சீரான படகுச் சேவையுமாகும். எனினும் இக்குறைகளைத் தீர்க்க தனியார் துறையோ, அரசாங்கமோ முன்வருவதில்லை. இதனுல் ஏற்படும் பொருளாதாரத் தாக்கத்தை தங்களைப்போன்றவர்களுக்கு விளக்கவேண்டியதில்லை. எனினும் பல சமயங்களில் கருவாட்டுச் சிப்பங்களோடு கருவாடாக, நாம் பிரயாணம் செய்து கருவாட்டு நாற்றத்தோடு உங்கள் முன்னிலையிலும் நிற்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இவற்றை எல்லாம் சிந்திக்கும்பொழுது இத்தீவுக்கு ஒரு பரவலான ஒன்ருேடொன்று இணைக்கப்பட்ட ஒரு பொருளாதாரத்திட்டம் தேவை என்பது தங்களுக்கு வலியுறுத்தப்படும். இத்திட்டம் அரசாங்கத்தாலும், வங்கிகளாலும், கூட்டுறவுத்துறையாலும், தனியார்துறையாலும் வரவேற்கக்கூடியதாக அமையவேண்டுமென்றும், இத்தீவில் வரப்போகும் அபிவிருத்திச் சபையாலும், மாவட்ட அபிவிருத்திச் சபையாலும் ஏற்று செயல்படுத்தக்கூடியதாக அமையவேண்டும்.

கௌரவ உணவு, கூட்டுறவு மந்திரி அண்மையில், நயினுதீவுக்கு வருகை தந்தபோது எமது நிலைமையை விளக்க பத்து நிமிடங்கள் அவகாசம் கிடைத்து பயன்படுத்தினேம். பொதுச் சேவைக் கூட்டுறவுச் சங்கத்துடன் இங்குள்ள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்களை இணைத்து நுகர்ச்சியாளர்களினதும் நலனையும் பேண இவ்விணைப்புச் சங்கத்திற்கு உத்தரவளிப்பதாகச் சொன்னூர்கள். வடமாகாணத்தில் இருக்கும் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக்கொண்ட ஒரு மாநாட்டைக் கூட்டி எமக்குள்ள சிக்கல்களைப் பரிசீலனை செய்து தீர்க்க வழி செய்வதாக முன்னைய மாவட்ட மந்திரி அவர்கள் உறுதியளித்தார்கள்." [செ]

## நூற்றுண்டு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடவசதியின்மையால் தற்போது கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக் கட்டிடங்களில் இடங்கொண்டிருக்கக் கூடிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடம், தற்போது திருநெல்வேலியில் அமைக்கப்பட்டு வரும் தனது சொந்தக் கட்டிடத்திற்கு இடம்மாறியதும் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலைக் கட்டிடங்கள் எந்த நோக்கத்தின் பொருட்டு அமைக்கப்பட்டனவோ அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அவ்விடத்தில் உடனடியாகத் தமிழ் வைத்திய முறையான சித்த வைத்தியத்தைப் போதிப்பதற்கான சித்த வைத்தியக் கல்லூரியை ஆரம்பிக்கும்படி இச்சபை கௌரவ சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறது.

## தொலைதொடர்பு--எழுதுவினைஞர்

# இரண்டுசங்கங்கள் சம்மேளனமாக இணைந்தன

[யாழ்ப்பாணம்]

"இலங்கை அஞ்சல், தொலைதொடர்பு உத்தியோகத்தர் சங்கமும்; அஞ்சல் எழுதுவினைஞர் சங்கமும் ஒரு சம்மேளனமாக இணையும் யோசனை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற இலங்கை அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் சங்க இரண்டாவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

புதிதாகத்தெரிவுசெய்யப்பட்ட தலைவர் திரு இ சுப்பிரமணியம் தமது உரையில், முன்னுள் தலைவர் திரு ஐ இரத்தினசிங்கத்தின் தியாக மனப்பான்மையை வெகுவாகப் பாராட்டியதுடன், அவருக்கு அங்கத்தவர் அளித்த ஆதரவைத் தொடர்ந்தும் தனக்கும் புதிய செயலாளர் திரு வி தங்கவேலாயுதசாமிக்கும் நல்கி, சங்கத்தின் இலட்சியத்தைக் கட்டிக்காக்கும்படி வேண்டிக்கொண்டார்.

இக்கூட்டத்தில் கௌரவ பேச்சாளர்களாக யாழ். பிரதேச அஞ்சல் நிர்வாக உத்தியோகத்தரும், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தலைவருமான திரு ஜி டி செல்வராசா, யாழ். பிரதேச அஞ்சலக அத்தியட்சகர் திரு கி பாலசிங்கம், யாழ். அஞ்சலக சிரேஷ்ட அஞ்சலதிபர் திரு எஸ் தியாகராசா, யாழ். அஞ்சலதிபர் திரு எம் அமிர்தராஜன், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ்கிளை காரியதரிசி திரு சிவபாலசிங்கம், அரசாங்க எழுதுவினைஞர் சங்க யாழ் கிளைத்தலைவர் திரு ம நமசிவாயம், அரசாங்க எழுதுவினைஞர் சங்கப்பொதுச் செயலாளர் திரு எஸ் சதாசிவம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கப்பிரமுகர்களான திருவாளர்கள், ஏ தங்கவேலாயுதம், வ சிவலிங்கம், அகில இலங்கை தமிழ்பேசும் தபால் தந்திஊழியர் சங்கப் பொதுக்காரியதரிசி திரு த நவரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை முதலிய பிரதேசங்களிலிருந்து அதிகமான அங்கத்தவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

### செயற்குழு

இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்க 1979-80ம் ஆண்டு தாய்ச் சங்க செயற்குழு உறுப்பினர்கள் வருமாறு:

தலைவர்: திரு இ சுப்பிரமணியம், அஞ்சலகம், யாழ்ப்பாணம், உபதலைவர்கள்: திரு வ வாரானசிங்கம், அஞ்சலகம், மட்டக்களப்பு, திருமதி ஐ எல் புவனேந்திரன், அஞ்சலகம் யாழ்ப்பாணம், திரு ஐ இரத்தினசிங்கம் அஞ்சலகம், கல்முனை, செயலாளர் திரு சி தங்கவேலாயுதசாமி, அஞ்சலகம், பருத்தித்துறை, உதவிச் செயலாளர்கள்: திரு வி எஸ் தங்கவடிவேல், அஞ்சலகம், வவுனியா, திரு ஆ சோமசேகரம் உரும்பிராய், திருமதி எல் குலசிங்கம் யாழ்ப்பாணம், பொருளாளர் திரு இ செல்லத்துரை மட்டக்களப்பு, துணைப் பொருளாளர் திரு க தம்பு யாழ்ப்பாணம், திரு வை மோகனதாசன் அளவெட்டி, உபபத்திராதிபர் திரு எஸ் ஆறுமுகசாமி காங்கேசன்துறை, திரு எஸ் ஏ கதிர்காமநாதன் மட்டக்களப்பு, செயற்குழு திரு த சிவராசா யாழ்ப்பாணம், திருமதி எஸ் நாகேஸ்வரி யாழ்ப்பாணம், திருமதி ஆர் ஜெகநாதன் யாழ்ப்பாணம், திரு ஆ சுந்தரலிங்கம் [மத்திய த ப] கொழும்பு, திரு ச தங்கவடிவேல் [மத்திய த ப] கொழும்பு, திரு எஸ் இளங்கோ [மத்திய த ப] கொழும்பு, திரு ஆ சோமசுந்தரம் [அஞ்சலகம்] சுன்னுகம், திரு எஸ் திருநாவுக்கரசு [அஞ்சலகம்] வல்வெட்டித்துறை, திரு எஸ் நல்லதம்பி [அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம்] திருகோணமலை, திரு கே யோகராசா [அஞ்சலகம்] அப்பாறை, திரு எஸ் சுரேந்திரன் [அஞ்சலகம்] காரைநகர், திரு கே விமலநாதன் [அஞ்சலகம்] காரைநகர், திரு ஆர் காசிராசலிங்கம் [அஞ்சலகம்] முருங்கன், திரு ஏ வேலாயுதம் [அஞ்சலகம்] வெள்ளவத்தை, திரு எம் விவேகானந்தன் [ம த பரிநிலயம்] கொழும்பு, திரு என் நடராசா [அஞ்சலகம்] தலைமன்னார், கணக்குப் பரிசோதகர் ரி எஸ் நவரத்தினம் [அஞ்சலகம்] யாழ்ப்பாணம். [கெ]

## இடமாற்றம்

[சாவகச்சேரி]

கோப்பாய் விசாரணைப் பகுதிக் கட்டளைக்குரவராகக் கடமையாற்றிவந்த வண. பிதா றெக்ஸ் குரூஸ் ஓ. எம். ஐ. அடிகளார், மிருசுவில் பங்கின் கட்டளைக்குரவராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# "சமய அறிவுக்கு போட்டிகள் உதவுகின்றன"

[ஊரெழு]

"இந்து சமய அபிவிருத்தியில் நாம் ஈடுபடுவதாக, நம்மைப்பற்றி நாமே தெரிந்து கொள்ளுவதுடன், நமக்கெல்லாம் உறுதுணையாக இருக்கும் இறைவனை சிந்தித்துப் பேரானந்தப் பெருவாழ்வையும் பெறக்கூடியதாக இருக்கின்றது. கடந்த ஓராண்டு காலமாக மிகவும் சிறப்புடன் இயங்கிவந்த இந்த இந்துசமய அபிவிருத்திக் கழகத்தின் பணியை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. இவர்களிடையே சமய அறிவை வளர்க்கும் வகையில் அவ்வப்போது பலவிதமான போட்டிகளை நடாத்தி வந்திருப்பது குறிப்பிடத்தக்க முயற்சியாகும்.

இவ்வாறு ஊரெழு இந்து சமய அபிவிருத்திக் கழகத்தின் ஓராண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கிய பிரதிஷ்டா கலாநிதி சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் குறிப்பிட்டார்.

கழகத் தலைவர் திரு சி என் பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி ஆண்டு விழாவில், கழகத்தால் நடாத்தப்பட்ட சமயப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. கழகச் செயலாளர் திரு. ந சுந்தரசாமிஐயர் ஏற்பாடு செய்து நடாத்திய இந்த விழாவில், திரு. சிவ மகாலிங்கம், திருமதி பொன் கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

## அந்நியச்—

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கப்பலின் இறக்குமதி வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டன. இக்கப்பலின் இறக்குமதி வேலைகளை மேற்கொண்ட கப்பல் ஏஜெண்ட் இளசனமெசர்ஸ் க. ஜெயபாலசிங்கம் கம்பனியினர் இறக்குமதி வேலையில் சுமார் ஐநூறு தொழிலாளர்களை ஈடுபடுத்தினர். காங்கேசன்துறை துறைமுகத்திற்கு இதுவரைவந்த உணவுக் கப்பல்கள் மூலம் க. ஜெயபாலசிங்கம் கம்பனியினர் நான்கு லட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட பணத்தை அந்நியச் செலாவணியில் உணவுக் கம்பனியினருக்கு பெற்றுக் கொடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்நாடு நடிகர்களின் கலையரங்கம்

சென்னை, ஆக. 60

தமிழ்நாட்டில் நடிகர் சங்க ஆதரவில் கட்டப்பட்டுள்ள கலையரங்கம் ஒன்றை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இன்று திறந்துவைத்தார்.

கவிஞரும், நாடக நடிகருமான சங்கரதாஸ்சுவாமிகளின் பெயர் இக்கலையரங்கிற்குச் சூட்டப்பட்டுள்ளது.

முதலமைச்சர், அமரர் வாசனின் படமொன்றையும் திறந்துவைத்தார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: GB/8948/78 The Eelanadu P B No. 49, Telegeram Eelanadu, Phone: 389.